பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 23 வெள்ளிக்கிழமை 06.05.2022 கதிர் 75

## குழந்தையைக் கொன்று கிணற்றில் வீசிய தாய்!

சீதுவை - துன்முல்லவத்தை பிரதேசத்தில் 6 மாதப் பெண் குழந்தையைக் கொலை செய்து, கழிவறைக் குழியில் வீசிய பெற்றோரைச் சீதுவைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குழந்தையைக் கழுத்து நெரித்துப் படுகொலை செய்த தாயார், சடலத்தைக் கிணற்றில் வீசியுள்ளார்.

☞2

## பல்கலை மாணவர்கள் மீது மீண்டும் கண்ணீர்ப் புகைக் குண்டு தாக்குதல்



### நாடாளுமன்ற வளாகத்தில் பதற்றம்

நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தை மேற்கொண்டு வரும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் இன்றும் தொடர்ச்சியாகக் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சையும், நீர்த்தாரைப் பிரயோகத்தையும் மேற்கொண்டு வருகின்றனர்.

நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற ஏக காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களை அப்புறப்படுத்தும் நோக்கில் பொலிஸார் இவ்வாறு நடவடிக்கை

☞2

## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

நாடாளுமன்ற அமர்வுகள் இன்று பிற்பகல் பெரும் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் வரும் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்கு வெளியில் ஆர்ப்பாட்டம் நடத்தும் இளைஞர்கள், யுவதிகள் மீது இன்று பிற்பகலும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதை அடுத்து நாடாளுமன்றிலும் சர்ச்சை ஏற்பட்டது. இதனையடுத்து நாடாளுமன்ற அமர்வுகள் குழம்பின.

நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டம் திங்கட்கிழமை காலை

☞2

# ஹர்த்தால் போராட்டத்தால் முழு நாடும் முற்றாக முடக்கம்





### அரசே வீட்டுக்குப் போ எனக் கோரி பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள்

☞2

## கோட்டா தலைமையில் அவசரமாக இன்று கூடுகின்றது அமைச்சரவை



அரசுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்படி இன்று மாலை 5. 30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் அமைச்சரவை கூடுகின்றது.

இதன்போது ஜனாதிபதி தீர்க்கமானதொரு அரசியல் முடிவை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

☞2

## ராஜபக்ஷக்களுடன் 'டீல்' சாணக்கியனுக்குத்தான்!

### தனக்கல்ல என ரணில் பதிலடி அச்சுறுத்தல் எனவும் விசனம்



கொழும்பு,மே 06

தமிழ்க் கூட்டமைப்பின் இரா. சாணக்கியன் எம்.பி., நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய உரையால் கடுப்பாகிப் போன ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கு இன்று

☞2

## இந்தியத் துணைத் தூதுவரின் அணி மூன்று தீவுகளைப் பார்வையிட்டது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.06

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூன்று தீவுகளில் அமைக்கப்படவுள்ள மின் உற்பத்தி நிலையங்களிற்கான இடங்களை இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜன் தலைமையிலான தூதரக

☞2

## 'ஹொரு கோ கம'வில் உள்ளாடைப் போராட்டம்



நாடாளுமன்ற வளாகத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று ஸ்தாபிக்கப்பட்ட 'ஹொரு கோ கம' என்ற போராட்டக் களத்தில் இன்று வித்தியாசமான போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது .

பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள இரும்புக் கம்பிகளைக் கொண்ட வேலிகளில்

☞2

## பொலிஸின் அடாவடித்தனம் அம்பலம்; ஆதாரத்தை வெளியிட்ட மாணவர்கள்!

### புதிய வகைக் கண்ணீர்ப் புகைக் குண்டு இறக்குமதி

இலங்கையில்பொலிஸார் ஏனைய நாள்களில் பயன்படுத்தும் கண்ணீர்ப் புகைக் குண்டுக்குப் பதிலாகத் தற்போது புதிய வகைக் குண்டு ஒன்றைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

ஏனைய நாள்களில் பொலிஸார் பயன்படுத்தும் கண்ணீர்ப் புகைக் குண்டு ஒரு துண்டாகும். அது ஒரு ஒற்றைக் குப்பி எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதனைக் கையால் பிடித்து வீச முடியும்.

எனினும், நேற்று மாலை நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது வீசிய கண்ணீர்ப் புகைக் குண்டு 3 துண்டுகளாக உடைந்துள்ளன எனத் தெரியவந்துள்ளது. அது உடைந்து அதில் இருந்து வாயு வெளியேறுகின்றது.

இது வழமையான கண்ணீர்ப் புகையை விடவும் அதிக வலுவானது.

☞2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஹர்த்தால் போராட்டத்தால் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய அரசை அதிகாரத்திலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தி இலங்கை முழுவதும் இன்று ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அரச, தனியார் துறைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றன.

இதற்கு வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாடு முழுவதும் அனைத்து நகரங்களிலும் வர்த்தகர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதனால் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல மூடப்பட்டுள்ளமையுடன், நகரங்களில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, தனியார் பஸ் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. அத்துடன் ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று இ.போ.ச. பஸ் சங்கங்கள் சில போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

1953ஆம் ஆண்டு இடம்பெற்ற ஹர்த்தாலுக்குப் பின்னர் முன்னெடுக்கப்படும் பெரிய ஹர்த்தால் போராட்டமாகவே இது பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, ஹர்த்தாலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் நாட்டின் பல இடங்களில் இன்று அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டப்பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசே வீட்டுக்குப் போ எனக் கோரி கோஷமிட்டனர்.

## இந்தியத் துணை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணி நேற்று நேரில் சென்று பர்வையிட்டது.

யாழில் உள்ள நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய 3 தீவுகளிலும் மின் உற்பத்தி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு அந்தத் திட்டம் கடந்த ஆண்டு சீனாவிடம் கையளிக்கப்பட்டது.

சீனாவிடம் அந்தத் திட்டம் கையளிக்கப்பட்டால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எனச் சுட்டிக்காட்டிய இந்தியா அந்த திட்டங்கள் சீனாவிடம் வழங்குவதனை கடுமையாக எதிர்த்தது.

இதனையடுத்து அரசியல் அழுத்தம் காரணமாக தீவுகளிற்கான மின் உற்பத்தி நிலைய அமைப்பு திட்டம் தற்போது இந்தியாவிடம் கையளிக்கப்பட்டதனையடுத்து யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர்கள் மற்றும் யாழ் செயலக அதிகார் ஒருவர் நேரில் சென்று திட்டம் அமையவுள்ள இடங்களைப் பார்வையிட்டனர்.

## 'ஹொரு கோ கம'வில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளாடைகளைக் காட்சிப்படுத்தி அந்த உள்ளாடைகளில் 'கோ ஹோம் கோட்டா' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது.

புதிதாக நேற்று ஆரம்பிக்கப்பட்ட போராட்டக் களத்துக்குப் பெருந்தொகையான வெளியாள்கள் உணவுப் பண்டங்களையும் தண்ணீர்ப் போத்தல்களையும் மற்றும் மருந்து வகைகளையும் கொண்டு வந்து கொடுத்து உதவி புரிந்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே உள்ளாடைகளைக் காட்சிப்படுத்தி இந்தப் போராட்டத்தைப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸின் அடாவடி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசும்போது முடிந்தளவு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் கண்களை உடனடியாகத் தண்ணீரால் கழுவிவிட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கண்ணீர்ப் புகைக் குண்டு மிகவும் வலுவானது என்பதால் அதிலிருந்து வெளியேறும் புகை நீண்ட நேரம் காற்றில் கலந்திருக்கும்.

ஏற்கனவே பல்கலைக்கழக மாணவர்கள் மீது வீசிய கண்ணீர்ப் புகைக் குண்டுகளை அவர்கள் கைகளால் பிடித்து மீண்டும் பொலிஸார் மீது வீசியதால் புதிய வகை கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பொலிஸார் பயன்படுத்துகின்றமை தெரியவந்துள்ளது.

**N 500 - CS Gas Hand Grenade (3 PCS)** எனப்படும் இந்தப் புதிய வகை கண்ணீர்ப் புகைக் குண்டு கொரியாவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களான மருந்துகள், எரிபொருள்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்குப் பணம் இல்லை என அரசு கூறுகின்ற போதிலும் கண்ணீர்ப் புகைக் குண்டு கொண்டு வருவதற்குப் பணம் உள்ளதா எனப் பல்கலைக்கழக மாணவர்கள் 'பேஸ்புக்' பக்கங்களில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## கோட்டா தலைமையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில் ஆராய இன்று மாலை விசேட அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி நடத்துகின்றார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

## ராஜபக்ஷக்களுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலடி கொடுத்து, சாணக்கியன் மீது சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியபோது, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி, சாணக்கியனின் உரை குறித்து தமது விளக்கத்தை முன்வைத்தார்.

ராஜபக்ஷக்களுடன் சாணக்கியனுக்குதான் அரசியல் 'டீல்' இருந்துள்ளது, அவர் ராஜபக்ஷக்களின் கட்சியின் பட்டியிருப்புத் தொகுதி அமைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். - என சுட்டிக்காட்டி, அது தொடர்பான நியமன கடிதத்தை ஆதாரமாக முன்வைத்தார்.

ராஜபக்ஷக்கள் தன்னை வீழ்த்துவதற்கு புலிகளுடன்கூட 'டீல்' வைத்திருந்தனர் என்பதை மீள் நினைவூட்டிய ரணில், சாணக்கியனுக்கு வேண்டுமானால் 'ராஜபக்ஷ புராணம்' கை தேர்ந்த விடயமாக இருக்கலாம் என வசைபாடினார்.

நீங்கள் வேண்டுமானால் மஹிந்த சரணம் கச்சாமி, பஸில் சரணம் கச்சாமி, நாமல் சரணம் கச்சாமி என துதி பாடியிருக்கலாம், எனவே, என்னையும் அந்த பட்டியலில் இணைந்து விட வேண்டாம். - எனவும் கிண்டல் பாணியில் கோரிக்கையொன்றை முன்வைத்தார் ரணில் விக்கிரமசிங்க.

பிரதி சபாநாயகர் விவகாரம் குறித்து தான் ஏன் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் பேச்சு நடத்தினார் என்பதற்கான விளக்கத்தையும் அவர் வழங்கினார்.

தமிழ்க் கூட்டமைப்பும் ஒருவரை நிறுத்த முன்வந்தது. எனவே, எதிரணிகளை ஐக்கியப்படுத்தவே நான் முற்பட்டேன். சுமந்திரன், சாணக்கியன், செல்வம், சிறிதரனுடன் பேசியிருந்தேன். - என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய சிறிதரன், ரணில் தன்னுடன் பேச்சு நடத்தினார் எனக் கூறுவது அப்பட்டமான பொய் என்றார்.

சித்தார்த்தன் என்பதையே சிறிதரன் எனத் தாம் விளித்து விட்டார் எனக் கூறி ரணில் சமாளித்தார்.

"நாடாளுமன்றத்தில் எனது செயற்பாட்டுக்காக சனிக்கிழமை காலை கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள ஐந்தாம் ஒழுங்கையில் உள்ள எனது இல்லத்தைச் சுற்றிவளைக்கத் திட்டமிடப்படுவதாகவும், அதற்காக அருகில் உள்ள மகளிர் கல்லூரி முன்றிலில் அணிதிரளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பாளர்களில் ஒருவராக சாணக்கியனும் இருக்கக் கூடும். ஆனால் இந்த அச்சுறுத்தல் அளவு மீறியது" - என்று விசனம் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.

# பொலிஸ் துப்பாக்கிச் சூடு பாலமுனையில் பதற்றம்





(நூருல் ஹுதா உமர்)

நேற்று இரவு அட்டாளைச்சேனை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாலமுனை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாமல் சென்று கொண்டிருந்த நபரை நிறுத்தினர் எனவும் அவர் நிறுத்தாமல் சென்றதமையால் பாதுகாப்பு கடமையில் இருந்தவர்கள் அவரை பலவந்தமாக தாக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன் காரணமாக படுகாயமுற்ற நிலையில் அவர் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் ஆத்திரமுற்ற பொதுமக்கள் பொலிஸ் சோதனைச்சாவடியை தாக்கி அழித்தமையுடன் பொது மக்களுக்கும் பாதுகாப்பு கடமையில் இருந்தவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதையடுத்து மேலதிக விசாரணைக்காக வந்த அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினரையும் தாக்கியுள்ளனர்.

இதன்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமுற்ற நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் பொது மக்களால் தாக்கப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்டோரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் உயர்மட்டக் குழு சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணைகள் இடம்பெறும் என உறுதியளித்ததையடுத்து பதற்ற நிலை தணிந்தது.

## குழந்தையைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலையில் கணவர் வீட்டுக்கு வந்து, குழந்தையைப் பற்றி விசாரித்தபோது, குழந்தையைக் கொன்று கிணற்றில் போட்டேன் என மனைவி தெரிவித்துள்ளார்.

மனைவியைக் காப்பாற்றுவதற்காகக் கிணற்றிலிருந்து குழந்தையின் சடலத்தை எடுத்த கணவன், அதைக் கழிவறைக் குழியில் வீசியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். குழந்தையின் தாய் மனநலம் பாதிக்கப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

## நாடாளுமன்றம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் என்று அறிவித்த சபாநாயக சபையை 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து அறிவிப்பு விடுத்தார்.

## பல்கலை மாணவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாடாளுமன்ற வளாக பிரதேசத்தில் இன்று அல்லோலகல்லோல நிலையும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது அளவுக்கு அதிகம்

'இளகிய இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி ஓங்கி அடிப்பான்' – என்பார்கள்.

அதுபோலவே 'ஊருக்கு இளைத்தவன் ஆண்டி' என்றும் கூறுவர்.

இலங்கை அரசியலில் இன்று மிகவும் இளைத்த – நலிந்து போன – நொந்துபோன – அரசியல்வாதி என்றால் ரணில் விக்கிரமசிங்கதான்.

இலங்கை நாட்டை மாறி மாறி ஆண்ட மிகப்பழைமை யான தேசியக் கட்சி ஒன்றின் தலைவர் அவர். நான்கு முறை பிரதமராக இருந்தவர். அரசியலில் கிழட்டு நரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் வளர்க்கப்பட்டவர். இன்று அவரது கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிதான் அக்கட்சிக்கு. அதுகூட நாடு முழுவதும் விழுந்த வாக்குகளினால் கிடைத்த ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி. தானே தனது கொழும்பு மாவட்டத்தில் படுதோல்வியுற்ற நிலையில் இன்று அந்தத் தேசியப் பட்டியல் உறுப்புரிமையில்தான் நாடாளுமன்றுக்கு அவர் வந்து இருக்கின்றார்.

தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் ஊருக்கு இளைத்த அரசியல் ஆண்டியாக அவர்தான் கண்ணில் படுகின்றார் போலும். அதனால்தான் இளகிய இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி ஓங்கி அடிப்பது போல வாங்கித் தள்ளியிருக்கின்றார் சாணக்கியன் எம்.பி.

அவரைத் திட்ட முன்னர் அல்லது வைய முன்னர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதி களும் ஒரு விடயத்தைக் கவனமாக நோக்க வேண்டும்.

ரணிலின் இன்றைய அரசியல் பரிதாப நிலைக்கு யார் காரணம்? தமது கட்சியினராலேயே கைவிடப்பட்டு, ஒதுக்கப்படும் அந்தகாரச் சூழலுக்குள் அவர் தள்ளப் பட்டமைக்குப் பிரதான பின்னணி என்ன?

2005 ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பை பகிஷ்கரிக்கும் முடிவை அன்றைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப தமிழர் தலைமை எடுத்தது. ஆனாலும் அதன் விளைவு என்னவாயிற்று? பின்னாளில் அந்த முடிவை எடுத்தவர்களையும் சேர்த்து வேதனையில் ஆழ்த்தும் நிலைமையைத் தமிழர்களுக்கு அது ஏற்படுத்தியது என்பதுதான் நிஜம்.

இந்த நாட்டின் ஏகபோக தலைவராக அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் திகழும் ரணிலின் வாய்ப்பை, தமிழ்த் தலைமைகள் தமக்கு சௌகரியமானது என்ற அடிப்படையில் அன்று எடுத்த முடிவே தட்டிப் பறித்தது.

அதன் பின்னரும் வெளிப்படையாக பேரினவாதத் தைப் பின்பற்றும் தீவிர போக்கை ரணில் கைக்கொள்ள வில்லை.


எதிர்த் தரப்பில் இருந்த ராஜபக்ஷக்கள் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை உச்சமாகப் பின்பற்றிய போதும் அதனை ரணில் விமர்சித்தார்.

ராஜபக்ஷக்களுக்குச் சரிக்குச் சமமாக அல்லது அதை விஞ்சும் வகையில் பேரினவாதம் பேசவும் கைக்கொள்ளவும் தயாரில்லாத ரணில் விக்கிரம சிங்கவினால் மாற்று அரசு ஒன்றை ஸ்தாபிக்கும் நிலைமைக்கு மேலெழ முடியாது என்று கண்டுதான் அவரைச் சூழ இருந்த பலரும் அவரைக் கைவிட்டு வெளியேறினர்.

தேசிய ரீதியில் உள்ள சிங்களத் தலைவர்களில் சிறுபான்மையினரை ஓரளவாவது அரவணைத்துச் செல்லவேண்டும் என்ற எண்ணம் உடைய தலைவராக – அதில் முதலாவது பிரமுகராக – அவரே உள்ளார். அதனால்தான் அவர் இன்று தென்னிலங்கையில் ஓரங்கட்டப்பட்டு இந்த நிலையில் இருக்கிறார் என்பதும் உண்மை.

சிறுபான்மையினருக்கு சார்பானவர் ரணில் என்ற நிலைப்பாடும் அல்லது கருத்துநிலையும் தென்னி லங்கை பௌத்த சிங்கள மக்களினால் அவர் ஒதுக் கப்படுவதற்குக் காரணம்.

அத்தகைய ஒரு தலைவரை தமிழ் அரசியல்வாதி கள் இவ்வளவு தூரம் மூர்க்கமாகத் தாக்கி உரையாற்று வது அதிகம்தான். அதிகப்பிரசங்கித்தனம்தான். It's too much. இது அளவுக்கு அதிகம்.



# நல்லூர் முருகன் கோவில்; அண்ணாமலை புகழாரம்

யாழ்ப்பாணம் – நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைப்போல் தமிழகத்தில் உள்ள ஆலயங்களை நடத்தவேண்டும் என பா.ஜ.க. கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை தமிழகத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த அவர், இலங்கையில் பல்வேறு இடங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில் யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது நல் லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று தரிசனம் மேற்கொண்டு ஆலய நடை முறைகளை நேரில் பார்வையிட்டிருந்தார்.

இந்தநிலையில் இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'நல்லூர் கந்தசுவாமி கோயில் 13 நூற்றாண்டு பழைமை வாய்ந்த கோயிலாகும். இந்த ஆலயம் தனி ஓர் அறங்காவலரால் நடத்தப்படுகிறது.

அங்கிருந்த அர்ச்சகர்கள் தட்டில் காசு கொடுத்தாலும் வாங்குவதில்லை. அர்ச் சனைக்கு ஒரு ரூபா மட்டும்தான். உண்டிய லில் மட்டும் தான் பணம் போட முடியும்.

பிரமுகர் அல்லது பிரமுகர் அல்லாதவர் என்று எதுவும் இல்லை. எல்லோருக்கும் ஒரே வரிசை தான். தமிழகத்திலும் அப்படி ஒரு சட்டம் கொண்டு வர முடியுமா?' என கேள்வி எழுப்பியிருந்தார்.

# வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது

எரிபொருள் விநியோகத்தை மட்டுப்ப டுத்துவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய நேற்று(வியாழக்கிழமை) மதியம் ஒரு மணி முதல் அமுலுக்கு வரும் வகையில், மோட்டார் சைக்கிள்களுக்கு 2,000 ரூபாவுக்கும், ஓட்டோக்களுக்கு 3,000 ரூபாவுக்கும் மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன், கார்கள், வான்கள் மற்றும் ஜீப் ரக வாகனங்களுக்கு, 8,000 ரூபாவுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப் படவுள்ளது.

எவ்வாறிருப்பினும், பஸ்கள், லொறிகள் உட்பட வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் உழவு வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அத்தியாவசிய மருந்துகளை பங்களாதேஷ் வழங்குமாம்!

இலங்கைக்கு 23 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை வழங்கவுள்ளதாக பங்க ளாதேஷ் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த மருந்துகள் கையிருப்பு இலங்கை நாணயத்தில் சுமார் 83 கோடி ரூபா பெறுமதி யானது. அதன்படி, பங்களாதேஷிடமிருந்து சுமார் 56 வகையான அத்தியாவசிய மருந்துகள் இவ்வாறு நன்கொடையாக வழங்கப்படவுள்ளன என சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித் துள்ளார்.

# எதிர்கால சந்ததியின் கல்வி அழியும் அபாயம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகர மான நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி அனைத்தும் ஒருமித்து இந்த நாட்டின் எதிர் கால சிற்பிகளான பாடசாலைக் குழந்தை களின் வாழ்க்கையை சீரழித்து வருகின்றது.

நாளுக்கு நாள் பசி பட்டினி மற்றும் போக்குவரத்து இடர்பாடு காரணமாக மாண வர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டு வரு கின்றது. பாடசாலை நேரங்களில் மாண வர்கள் அத்தியாவசியப் பொருள்களுக்காக வரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்காக அந்த மாணவர்களிடம் கேள்வி கேட்க எவராலும் முடியாது.

இப்போது அரசாங்கத்திற்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள போராட்டம் அனைத்துத் துறைகளையும் முடக்கி வருகிறது. இது எமது எதிர்கால சந்ததியாகிய குழந்தைகளையே பெரிதும் பாதிக்கின்றது. இவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற சாதகமான மார்க்கங்கள் எதனையும் எவரும் கண்டறிவதாக இல்லை. சரி பாடசாலைகளை இயக்கி குழந்தைகளின் கல்வி வளம்பெற அனைவரும் ஒத்துழைப்போமென்றால் அதற்கான தடைகளே ஏராளமாக வருகின் றன.

மாணவர்களின், ஆசிரியர்களின், அதி பர்களின், கல்விசார் உத்தியோகத்தர்களின், போக்குவரத்து மார்க்கங்கள் படுமோசமாக உள்ளன . உண்மையில் இந்நாட்டின் எதிர் கால சந்ததியின் வாழ்க்கையில் இப் போதைய அரசாங்கத்துக்கு அக்கறை இருக்குமாக இருந்தால் பாடசாலைக்கான போக்குவரத்து மார்க்கங்கள் அனைத்தையும் இலவசமாக்க வேண்டும். அவற்றை விடுத்து மாற்றுவழிகளைத் தேடக்கூடாது.

இந்நாட்டில் போராட்டம் நீண்டு செல்லு மாக இருந்தால் மாணவரின் கல்வி மட் டுமல்ல அவர்களின் வாழ்க்கையும் கேள்விக்குறி யாகும். பசியும், பட்டினியும், விரக்தியும் அவர்களை மாற்று வழிகளுக்குக் கொண்டு விடும். அதற்கு உதாரணமாக குழந்தை மாணவர்கள் பாடசாலைக்கே தீ வைத்த சம்பவம் சாதாரணமான ஒன்றல்ல.

இதே மாணவப் பராயத்தைத் தாண்டி உழைத்து வாழ ஆசைப்படும் இளையோரே இன்று ஜனநாயக வழியில் போராடிவரு கின்றனர்.

ஆகையால் இந்நாட்டில் உள்ள அனை வரும் தீர்க்க தரிசனமாகச் சிந்தித்து எதிர் காலச்சந்ததியின் வாழ்க்கை அழிந்துவிடாமல் பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஆசிரி-யர்களுக்கு பழி வந்துவிடாமல் முடிவுகளை உடனடியாக எடுத்தேயாக வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# உக்ரைன் திடீர் வேகம்

# பறிபோன சில இடங்கள் மீட்பு

ரஷ்ய போர் 70 நாள்களை கடந்து தொடர்ந்து வருகிறது. மரியுபோல், கருங்கடல் ஒட்டியுள்ள பகுதிகள், கிழக்கு உக்ரைன் மற்றும் தெற்கு உக்ரைனை கைப்பற்ற ரஷ்யா தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. மேற்கு நாடுகளின் ஆயுத உதவியால் உக்ரைன் ராணுவம் திடீர் உத்வேகம் பெற்று பதிலடி கொடுத்து வருகிறது. அதன்படி, தெற்கு உக்ரைனில் ரஷ்யா கட்டுப்பாட்டில் இருந்த கெர்சன், மைகோலாய் நகரங்களின் சில பகுதிகளை மீட்டுள்ளதாகவும், கிழக்கில் உக்ரைனில் உள்ள டான்பாஸ் பகுதியில் 11 ரஷ்ய தாக்குல்கள் முறியடிக்கப்பட்டு உள்ளன எனவும் உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் டான்பாஸில் உள்ள நகரங்கள் மீது ரஷ்யா நடத்திய தாக்குதல்களில் 5 பேர் கொல்லப்பட்டனர். 25 பேர் காயமடைந்தனர். வீடுகள் மற்றும் பள்ளி ஒன்றும் சேதமடைந்தன. உக்ரைன் முழுவதும் ஆயுதங்கள் சப்ளையை தடுக்க ரயில் நிலையங்கள் மீது ரஷ்யா தாக்குதலை தொடர்ந்தன. வான்வழி தாக்குதல்களும் தொடர்ந்தன. உக்ரைன் தலைநகர் கீவ் அருகிலும் குண்டு வீசப்பட்டது. அமைதியாக இருந்த மேற்கு பகுதியில் உள்ள லிவிவ் நகரத்தில் நேற்று அதிகாலை தாக்குதல் எச்சரிக்கை சைரன்கள் ஒலித்ததால் மக்கள் பீதி அடைந்தனர். இந்த பகுதி வழியாகதான் மேற்கத்திய நாடுகளின் ஆயுத உதவிகள் செல்வதால், ரஷ்யா வான்வழி தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளது. மரியுபோலிலும் தாக்குதல் தொடர்ந்தது.

## ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு வாகன சாரதி உரிமம் வழங்குவதை நிறுத்திய தலிபான் அரசு

### மகளிர் அமைப்புகள் கண்டனம்



ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு வாகன சாரதி உரிமம் வழங்குவதை திடீரென தலிபான் அரசு நிறுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தலிபான் மீண்டும் ஆட்சியை பிடித்ததில் இருந்து பெண்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் 6ஆம் வகுப்புக்கு மேல் பெண்கள் பள்ளிகளுக்கு செல்ல தலிபான் அரசு தடை விதித்தது. இந்த சம்பவம் உலகளாவிய கண்டனத்திற்கு வழிவகுத்தது. இந்நிலையில் பெண்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்ககூடாது என்று ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளுக்கு தலிபான்கள் உத்தரவிட்டுள்ளனர் என ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பெண்கள் கார்களில் பயணிக்கலாம் தவிர பெண்கள் வாகனங்களை ஓட்ட கூடாது என தலிபான் அரசு கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வெளிப்படையாக கருத்து தெரிவிக்க தாலிபான்கள் மறுத்துவிட்டனர். பெண்களுக்கு சாரதி உரிமம் வழங்குவது நிறுத்தப்பட்டதற்கு மகளிர் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. ஆப்கானிஸ்தானின் அடுத்த தலைமுறை பெண்களுக்குதற்போது அவர்களது தாய்க்கு உள்ள வாய்ப்புகள் கிடைக்க கூடாது என்பதில் தலிபான்கள் உறுதியுடன் இருக்கின்றனர் என அவர்கள் குற்றம் சாடுகின்றனர்.

## உக்ரைன்- ரஷ்யா போர் முடிவுக்கு வர வேண்டும்

### ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ்



சீனா, அமெரிக்கா, அயர்லாந்து, பிரான்ஸ் மற்றும் மெக்சிக்கோ உள்ளிட்ட பெரும்பாலான பாதுகாப்பு கவுன்ஸிலில் உறுப்பினர்கள் பலமாதங்களாக நீடித்து வரும் போருக்கு முடிவு கட்ட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையும், பல்வேறு நாடுகளும் உக்ரைனில் ரஷ்யாவின் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இந் நிலையில், இதுகுறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கூறியதாவது:-

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு அதன் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை மீறுவதாகும். உக்ரைன், ரஷ்யா மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களின் நலனுக்காக போர் முடிவுக்கு வரவேண்டும் என்றார்.

## உகாண்டாவில் சோகம்; பஸ் கவிழ்ந்த விபத்தில் 20 பேர் சாவு

உகாண்டாவில் நடந்த பஸ் விபத்தில் பலியான 20 பேரில் 7 சிறுவர்களும் அடங்குவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான உகாண்டாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள போர்ட் போர்டல் நகரில் இருந்து தலைநகர் கம்பாலாவுக்கு பயணிகள் பஸ் ஒன்று புறப்பட்டுச் சென்றது. பஸ்ஸில் 30க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்தனர்.

போர்ட் போர்டல் நகருக்கு அருகே உள்ள நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தபோது பஸ் திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் பஸ் சாலையில் தறிகெட்டு ஓடியது.

நெடுஞ்சாலையோரம் உள்ள தேயிலை தோட்டத்துக்குள் பாய்ந்த பஸ் பலமுறை உருண்டு விபத்துக்குள்ளானது. இதில் பஸ் உருக்குலைந்து போனது. இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 7 சிறுவர்கள் உள்பட 20 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.






## உக்ரைன் - ரஷ்யா போரை நாங்கள் ஆதரிக்கவில்லை

### பெலாரஸ் அதிபர் விளக்கம்

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 70 நாள்களைத் தாண்டியுள்ளது. இந்தப் போரில் ரஷ்யா உக்ரைன் மீது பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

உக்ரைனில் உடனடியாக வன்முறையை நிறுத்தி, பேச்சுவாயிலாக தீர்வு காணும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ரஷ்யா போரால் உக்ரைன் நாட்டில் ஏற்பட்டுள்ள உயிர் பலிக்கு இந்தியா மற்றும் பிரான்ஸ் கண்டனம் தெரிவித்தன. அத்துடன், போரின் தாக்கத்தால் உணவுப் பொருள்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை தவிர்க்க இந்தியாவும், பிரான்ஸும் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளன.

உக்ரைன் ராணுவம் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள கெர்சான், மைகோலேவ் ஆகியவற்றில் சில பகுதிகளை ரஷ்யா படைகளிடம் இருந்து மீட்டுள்ளது.

கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்ய படைகள் குண்டு வீச்சை தொடர்ந்தன. நாடு முழுவதும் உள்ள ரயில் நிலையங்கள் மற்றும் விநியோக இலக்குகளையும் குறிவைத்துதாக்கின. ஆனாலும் டான்பாசின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளில் ரஷ்யாவின் 11 தாக்குதல்களை உக்ரைன் முறியடித்துள்ளதாக நேற்று தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போரில் ரஷ்யாவுக்கு ஆதரவாக பெலாரஸ் அரசும் செயல்பட்டு வருவதாக மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டின.

இந்நிலையில், ரஷ்யா, உக்ரைன் போரை தான் ஆதரிக்கவில்லை என பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்துள்ளார்.

எவ்வித போரையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உக்ரைன் – ரஷ்யா இடையே பேச்சுதொடங்கியுள்ளது. விரைவில் நல்லமுடிவுஎட்டப்படுமென நம்புகிறேன் என தெரிவித்தார்.

## 84 ஆண்டுகளாக ஒரே நிறுவனத்தில் பணியாற்றி கின்னஸ் சாதனை படைத்த 100 வயது முதியவர்



நூறு வயதிலும் அதே உற்சாகத்துடன் பணியாற்றும் வால்டர், பணியை விரும்பி செய்தால், ஒரே நிறுவனத்தில் நிச்சயம் நீடிக்க முடியும் என்கிறார் 84 ஆண்டுகளாக ஒரே நிறுவனத்தில் பணியாற்றி கின்னஸ் சாதனை படைத்த 100 வயது முதியவர்.

தனியார் துறையை பொறுத்தவரை இன்றைய நவீன காலத்தில் ஒரே நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெறுவது அரிதான ஒன்றாக உள்ளது. இந்த சூழலில் பிரேசிலில் நூறு வயதை கடந்த முதியவர் ஒருவர் 84 ஆண்டு களாக ஒரே நிறுவனத்தில் தொடர்ந்து பணியாற்றி சாதனை படைத்திருக்கிறார். இதற்காக அவரது பெயர் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# ஆறு மிதக்கும் காவல் நிலையங்கள் திறந்து வைத்தார் அமைச்சர் அமித்ஷா



மேற்கு வங்காளத்தில், பங்காளதேஷ் எல்லையை ஒட்டி ஆற்றில் 6 மிதக்கும் காவல் நிலையங்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா திறந்து வைத்தார்.

இரண்டு நாள் பயணமாக மேற்கு வங்காளத்துக்கு சென்ற அமித்ஷா ஹிண்டால்கஞ்ச் முகாமுக்கும் சென்றார். அமித்ஷாவை எல்லை பாதுகாப்பு படை அதிகாரிகள் வரவேற்றனர். ஹிண்டால்கஞ்சில் உள்ள ஆற்றில் – படகுகளில் செயல்படவிருக்கும் 6 மிதக்கும் புறக்காவல் நிலையங்களை அவர் திறந்து வைத்தார்.

அந்த இடம் இந்திய – பங்காளதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. புறக்காவல் நிலையங்கள் மூலம் எல்லைக் கண்காணிப்பை வலுப்படுத்த முடியும் என்று தெரிவித்த எல்லைப் பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர், இதுபோன்ற மிதக்கும் புறக்காவல் நிலையங்கள் படிப்படியாக இன்னும் திறக்கப்படும் என்றும் கூறினார்.

அங்கு ஒரு படகு அம்புலன்ஸையும் அமித்ஷா கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். எளிதில் நுழைய முடியாத சுந்தரவனக் காடுகளில் உள்ள மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்க இந்த அம்புலன்ஸ் பயன்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் எல்லை பாதுகாப்பு படை நிகழ்ச்சியில் அமித்ஷா கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றிய அவர்,

நம் நாட்டு எல்லைகளை ஊடுருவலும், கடத்தலும் நடக்காமல் பாதுகாப்பது நமது கடமை.

உள்ளூர் நிர்வாகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் ஊடுருவலையும், கடத்தலையும் தடுப்பது கடினம். இருப்பினும், மக்களின் நிர்பந்தத்தால் அந்த ஒத்துழைப்பை உள்ளூர் அதிகாரிகளே தர வேண்டிய நிலைமைக்கு தள்ளப்படுவார்கள். அத்தகைய அரசியல் சூழ்நிலை விரைவில் உருவாகும், என்று தெரிவித்தார்.

## கட்சிக்கு எதிரான தனியார் நிறுவனம் சார்பில் சிதம்பரம் ஆஜரானதற்கு காங்கிரஸ் எதிர்ப்பு



தனியார் நிறுவனத்துக்கு ஆதரவாக ப.சிதம்பரம் ஆஜரானதற்கு காங்கிரஸ் வக்கீல்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தினர்.

மேற்கு வங்காள அரசு, தனக்கு சொந்தமான மெட்ரோ பால் பண்ணையின் பங்குகளை கெவென்டீர் என்ற தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்துள்ளது. இதை எதிர்த்து மேற்கு வங்காள மாநில காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி கொல்கத்தா உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, கெவென்டீர் நிறுவனத்துக்கு ஆதரவாக முன்னாள் மத்திய நிதி அமைச்சரும், மூத்த வக்கீலுமான ப.சிதம்பரம் ஆஜராகி வாதிட்டார். பின்னர் அவர் நீதிமன்றை விட்டு வெளியேறியபோது, அவர் தனியார் நிறுவனத்துக்கு ஆதரவாக ஆஜரானதற்கு காங்கிரஸ் வழக்கறிஞர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினர்.

காங்கிரஸ் கட்சியின் உணர்வுகளுடன் ப.சிதம்பரம் விளையாடி வருகிறார் என்றும் மாநில காங்கிரஸ் தலைவர் நடத்தி வரும் வழக்கில், அவருக்கு எதிரான தனியார் நிறுவனம் சார்பில் அவர் ஆஜராவது முறையல்ல எனவும் காங்கிரஸ் நலனுக்கு எதிராக எந்தத் தலைவர் செயல்பட்டாலும் இதேபோல்தான் நடந்திருப்போம், என்றும் போராட்டம் நடத்திய நீதிபதிகளில் ஒருவர் தெரிவித்தார்.



## வெளிநாடு செல்பவர்கள் பூஸ்டர் டோஸ் தடுப்பூசிக்கு காத்திருக்கத் தேவையில்லை

வெளிநாடு செல்பவர்கள் பூஸ்டர் டோஸ் செலுத்துவதற்கு 9 மாதம் காத்திருக்க தேவையில்லை என்று இந்திய மத்திய அரசுக்கு நோய் தடுப்புக்கான ஆலோசனைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இந்தியாவில் இரண்டாவது டோஸ் கொரோனா தடுப்பூசி போட்ட 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், முன்னெச்சரிக்கை டோஸ் எனப்படும் பூஸ்டர் டோஸ் போடுவதற்கு 9 மாதங்கள் காத்திருக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்த நடவடிக்கையால் வெளிநாடு செல்வோர் பாதிக்கப்பட்டனர். பூஸ்டர் டோஸ் போட்டால் மட்டுமே அனுமதி அளிக்கும் நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து வெளிநாடு செல்வோர் பூஸ்டர் டோஸ் போடுவதற்கு 9 மாதங்கள் காத்திருக்க தேவையில்லை எனவும், அந்தந்த நாடுகளின் விதிகளுக்கு ஏற்ப தேவைப்படும் நேரத்தில் போட்டுக்கொள்ளலாம் எனவும் இந்திய தேசிய நோய் தடுப்புக்கான தொழில்நுட்ப ஆலோசனைக்குழு மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது

## விசாரணைக் கைதி மரண விவகாரம் தொடர்பாக சட்டசபையில் இருந்து அ.தி.மு.கவினர் வெளிநடப்பு

சென்னையில் பொலிஸ் காவலில் இருந்த விசாரணைக் கைதியான விக்னேஷ் என்பவர் மரணம் அடைந்தார். அவரது உடலில் காயங்கள் இருப்பதாகவும், பொலிஸார் அடித்து துன்புறுத்தியதன் காரணமாகவே விக்னேஷ் உயிரிழந்தார் என்றும் அவரது உடலில் காயங்கள் குடும்பத்தினர் குற்றம் சாட்டினர். இந்த பிரச்சினையை அ.தி.மு.க.தமிழக சட்டசபையிலும் எழுப்பியது. அதன்பின்னர் விக்னேஷின் மரணம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி .விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட்டது. அவரது குடும்பத்துக்கு 10 லட்சம் நிவாரண உதவியையும் அளித்து உத்தர விட்டது. இந்தநிலையில், சட்ட சபையில் இன்றும் இந்த விவகாரம் எதிரொலித்தது. இதுபற்றி சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், 'விக்னேஷ் உடலில் 13 இடங்களில் காயங்கள் இருந்தமை, பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. எனவே, இந்த வழக்கை தமிழக காவல்துறை அதிகாரிகள் விசாரித்தால் நியாயம் கிடைக்காது. நேர்மையான முறையில் விசாரணை நடைபெற வேண்டுமானால் இந்த வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்க வேண்டும்' என வலியுறுத்தினார். பின்னர் இந்த கோரிக்கையை வலியுறுத்தி அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இந்த வழக்குப் பற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் விளக்கம் அளித்தார். விக்னேஷ் மரணம் விவகாரத்தில் சட்டப்படி அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என கூறிய அவர், பிரேதபரிசோதனை அடிப்படையில் கொலை வழக்காக மாற்றப்பட்டு விசாரணை நடப்பதாக தெரிவித்தார்.



# இந்தியாவில் கொரோனா உயிரிழப்பு; பிரதமர் மோடி பொய் சொல்கின்றாராம்




வியாழனன்று உலக சுகாதார அமைப்பு 1.49 கோடி மக்கள் கொரோனாத் தொற்றுநோயின் தாக்கம் காரணமாகப் பலியாகியுள்ளனர். அதில் இந்தியாவில் 47 லட்சம் கொரோனா இறப்புகள் பதிவாகி உள்ளன என தெரிவித்திருந்தது. இது அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களில் உலகளவில் கொரோனா இறப்புகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காகும். ஆனால், இதனை இந்தியா கடுமையாக மறுத்துள்ளது.இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, அறிவியல் பொய் சொல்லாது, ஆனால் பிரதமர் நரேந்திரமோடி பொய் சொல்வார் என கூறியுள்ளார்.

இந்தியாவில் கொரோனாவால் 47 லட்சம் பேர் இறந்துள்ளனர். அரசு கூறுவது போல் 4.8 லட்சம் இல்லை. அறிவியல் பொய் சொல்லாது. ஆனால் மோடி கூறுகிறார், எனவும் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு தலா 4 ரூபா லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சாய்ந்தமருதில் இரவு வேளைகளில் தொடர்ந்து வீசும் பலத்த துர்நாற்றம்

## களவிஜயத்தில் ஈடுபட்டது சுகாதாரத்துறை காரணத்தைக் கண்டறிவதிலும் இழுபறி







(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருதில் சில நாள்களாக மாலை முதல் அதிகாலை வரை பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் தொடர்ந்தும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதேச வாசிகள் இந்த துர்நாற்றம் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் விலங்கறுமனையிலிருந்து வருவதாகவும், மாட்டின் என்புகள் மற்றும் மாட்டின் தோலைத் தீயிட்டு அழிப்பதனால் வரும் துர்நாற்றம் என்றும் தெரிவித்தனர்.

இந்தத் துர்நாற்றம் காரணமாக குடியிருப்புப் பிரதேசங்களில் தாங்கள் பலத்த சங்கடங்களை அனுபவிக்கின்றனர் எனவும், துர்நாற்றத்தைத் தாங்க முடியாமல் இந்தப் பிரதேசத்திலிருந்து தாங்கள் இடம்பெயர வேண்டிய நிலை உள்ளதாகவும் குறிப்பிடும் அவர்கள் இது தொடர்பில் சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

அது மட்டுமின்றி சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் பொதுமக்களினால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களும், பொதுமக்களும் சுகாதாரத் துறையினருக்கு எடுத்துரைத்தமையை அடுத்து, அந்தப் பிரச்சினையின் அவசர நிலையறிந்து துர்நாற்றம் வருவதாகப் பொதுமக்கள் குற்றம் சுமத்திய விலங்கறுமனைக்கு நேற்று முன்தினம் நண்பகல் கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஜே.கே.எம். அர்சத் காரியப்பர், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம். நியாஸ், பொதுசுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் திடீரெனெ களவிஜயம் மேற்கொண்டு நிலைமைகளைப்பார்வையிட்டனர்.

இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்ட நேரம் அந்த விலங்கறுமனையில் பாரியளவிலான துர்நாற்றம் வீசுவதற்கான எவ்வித காரணங்களும் இல்லாதிருந்தது. மாடுகளை அறுக்கும் இடம் சுத்தமாக இருந்ததுடன் உப்பு மற்றும் இரசாயன பதார்த்தங்களை கொண்டு தோலைப் பதப்படுத்தி வைத்திருந்தனர். குவித்து வைத்திருக்கும் என்புகள் இயந்திரங்களைக் கொண்டு தூளாக்கப்பட்டிருந்தன. அங்கு தோல்கள் வெயிலில் உலர விடப்பட்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

'விலங்கறுமனை நடவடிக்கைகளை ஒழுங்காக செய்வதற்கு சோடியம் சல்பேட் எனும் இரசாயன பொருளைப் பயன்படுத்தி வருகின்றோம். இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறை காரணமாக அந்த இரசாயன பொருளை இறக்குமதி செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும் இறக்குமதி செய்யப்பட்ட சோடியம் சல்பேட் எனும் இரசாயன பொருள் துறைமுகத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் தாண்டியும் நாங்கள் மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு சுகாதார வழிமுறைகளின் படியே இந்த விலங்கறுமனை நடவடிக்கைகளை ஒழுங்காகச் செய்து வருகிறோம். குறித்த பிரதேசத்திலையே நாங்களும் வாழ்ந்து வருவதனால் இரவு நேரங்களில் வரும் துர்நாற்றம் உண்மையே. ஆனால் அது எங்கள் விலங்கறுமனை நடவடிக்கை மூலம் ஏற்படுவதல்ல.

எங்களின் விலங்கறுமனைக்கு நேரடியாக வந்து பரிசோதனை செய்துள்ள சுகாதார தரப்பினர் எங்களின் விலங்கறுமனை நடவடிக்கைகளை ஒழுங்காக செய்ய முன்வைக்கும் தீர்வை ஏற்று அதன்படி நடக்க தயாராக இருக்கிறோம்' – என விலங்கறுமனை உரிமையாளரான மீராசாஹிப் அஷ்ரப் சுகாதாரக்குழுவினரிடம் தெரிவித்தார்.

நீண்டநேரமாக ஆய்வுசெய்த சுகாதாரத்தரப்பினர் விலங்கறுமனை நடவடிக்கை தொடர்பில் பல்வேறு ஆலோசனைகளை விலங்கறுமனை ஊழியர்களுக்கு இதன்போது வழங்கினர்.

பின்னேர நேரங்களில் முறையற்ற விதமாக ஆற்றோரங்களில் கொட்டப்படும் கோழிக் கழிவுகளினால் இரவு நேரங்களில் ஆவியுயிர்ப்பு நடவடிக்கை நடைபெறும்போது துர்நாற்றம் வீசிவருவதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து பெரியளவில் நடத்தப்பட்டு வரும் கல்முனை பிரதேச கோழிக்கடை ஒன்றை கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தலைமையிலான சுகாதாரக் குழுவினர் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு பரிசோதனை செய்தனர்.

இருந்தாலும் சாய்ந்தமருது பிரதேசத்தில் இரவு நேரங்களில் வீசும் துர்நாற்றத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் தொடர்ந்தும் இது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்யத் தயாராக இருப்பதாக களப்பணி செய்த சுகாதாரக்குழுவினர் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# யாசகருக்கு ஒருநாளைக்கு வழங்கும் தொகையை விட மாநகரசபைக்குச் செலுத்தும் ஆதனவரி குறைவானது

## சிறந்த சேவைகளை பெற வரிசெலுத்துவது கட்டாயம் என வலியுறுத்தல்

(நூருல் ஹுதா உமர்)

மாநகர சபையின் பிரதான கடமைகளில் ஒன்று திண்மக்கழிவுகளை அகற்றும் பணியாகும். அப்பணி கடந்த ஒரு மாதகாலமாக முன்னரை விட சற்று குறைந்த வேகத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை பிரதேசங்களில் நடைபெறுவதனை மக்கள் அடையாளம் கண்டிருக்கலாம். இது நிதி நிலைமை மோசமாக இருப்பதனால் ஏற்பட்டதாகும். இதற்கு காரணம் டீசல் விலை இருமடங்கு அதிகரித்ததும் வாகன உதிரிப்பாகங்களின் விலை பன்மடங்கு அதிகரித்தமையும் என கூறிக்கொண்டே போகலாம். மாநகர சபையின் பிரதான வருமானம் ஆதன வரியாகும். இது வரையில் நான்கு கோடி 60 லட்சம் ரூபா ஆதனவரி மக்களால் செலுத்தப்படாமல் நிலுவையாக காணப்படுகின்றது என அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், கிழக்கின் கேடயத்தை பிரதான செயற்பாட்டாளருமான, அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திண்மக் கழிவுகளை அகற்றாமல் விட்டால், வீதி விளக்குகள் இரவு நேரங்களில் ஒளிராது இருந்தால்,



வடிகான்கள் துப்புரவு செய்யப்படாது விட்டால், நீர் தேங்கி நின்றால், ஏன் பூனை, நாய் போன்ற விலங்குகள் இறந்துகிடந்தால் கூட நாம் மாநகர சபையைத்தான் அழைக்கிறோம். விமர்சிக்கிறோம். ஆனால் நாளொன்றுக்கு சராசரியாக தத்தமது ஆதன மதிப்பிற்கு ஏற்ப பெருவாரியான வரி இறுப்பாளர்களுக்கு 5 ரூபாவும், குறிப்பிட்டளவினருக்கு 8 ரூபாவும் சிறு தொகையினருக்கு 13 ரூபாவும் தான் அறவிடப்படுகின்றது ( இதில் ஒரு ரூபா கூடலாம், குறையலாம்). இது நமது வீட்டுக்கு யாசகம் கேட்டுவருபவர்களுக்கு நாம் கொடுக்கும் அளவினை விட மிகச்சிறிய தொகையாகும் என்பதனை நமது மக்கள் புரிந்து கொள்வார்கள் என நாங்கள் நம்புகின்றோம்.

அண்மையில் ஒருகடையில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த வேளையில் ஒருத்தர் உள்ளே நுழைந்து சிகரட் ஒன்றை வாங்கிக்கொண்டு மாநகர சபை வரி அறவிடும் விடயம் தொடர்பில் பேசிவிட்டு நிமிர்ந்தபோது நான் நிற்பதைகண்டு சங்கடமடைந்தார். நான் அவரிடம் உங்களுக்கு வருடத்துக்கு எவ்வளவு வரி அறவிடுகின்றார்கள் எனக்கேட்டேன். வருடத்துக்கு1200 ரூபா என்று அவர் கூறினார். நான் அவருக்கு விளக்கினேன். மாதத்துக்கு 100 ரூபா. நாளொன்றுக்கு 3 ரூபா 33 சதம். ஆனால் நீங்கள் புகைக்கும் இந்த ஹராமான சிகரட்டுக்கு 65 ரூபா. இவ்வளவு சேவை செய்யும் ஒரு நிறுவனத்துக்கு ஒரு நாளைக்கு 3 ரூபா கொடுக்க முடியாதா என்று நான் கேட்டதும் அந்த சகோதரன் சங்கடப்பட்டார்.

குப்பைகளை 3 தினங்களுக்குள் அகற்றா விட்டால் என்ன நடக்கும் என்பதனையும் நாம் அறிவோம் அதற்குரிய ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. அதனால் ஆதன வரி நிலுவை உடையவர்கள் உங்களால் முடியுமான தொகையினை மாநகரசபையில் செலுத்துங்கள். இல்லாவிட்டால் வீடுவீடாக வரும் அதிகாரிகளிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுகொள்ளுங்கள். சமுர்த்தி பயனாளிகள், விதவைத் தாய்மார்கள், வருமானத்தை முற்றாக இழந்தவர்களும் வருமானம் இன்மையை உறுதிப்படுத்தி ஆதன வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவர்களாவர். – என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொத்துவில் நகரில் 'ஒசுசல' கிளை திறக்கக் கோரிக்கை

பொத்துவில் நகரில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் (அரச ஒசு சல) கிளை ஒன்றினை திறக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரச ஒசுசல கிளை ஒன்று இல் லாமையினால் தமக்குத் தேவையான மருந்துகளை பெற்றுக் கொள்வதில் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பொத்துவில், லாகுகல, பாணம, கோமாரி ஆகிய பிரதேசங்களில் சுமார் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளைத் தனியார் மருந்து விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, அவசரத் தேவைகளுக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கும் ஆளாகியுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். நோயாளிகள் அரச ஒசுசலவில் மருந்தைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 40 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள அக்கரைப்பற்று, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை எதிர் கொள்வ தோடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் பொத்துவில் பிரதேசத்தில் அரச ஒசுசல திறக்காமையையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வே பொருளாதார மீண்டெழுகைக்கு ஒரே வழி

## முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் கருத்து



அண்மைய நாள்களில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை நாட்டில் வந்து தொழில் பேட்டைகளை வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களின் ஊடாக அனுமதிகளைத் தான் பெற்றுத் தருகிறேன் எனக் கூறியுள்ளார்.

காரணம் நாட்டில் உள்ள டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முயற்சி எனவும் தெரிவித்துள்ளார்.

இராஜங்க அமைச்சரின் பிரதான இலக்கு புலம்பெயர் தமிழர்கள் சார்ந்த முதலீட்டாளர்களையே குறிவைத்தே அறிவிப்பை விடுத்துள்ளார். நல்லது நாடு முன்னோக்கி செல்ல வேண்டும் இந்த விடயத்தில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்! ஆனால் இன்றைய பொருளாதாரப் பின்னடைவு என்பது எதனால் ஏற்பட்டது? அதற்கான தீர்வைக் கண்டுவிடாது பொருளாதாரத்தை மீண்டெழ வைக்கலாம் என ஆட்சியாளர்கள் சிந்திப்பது அபத்தமானது இங்கு தான் தொடர்ந்தும் அரசாங்கம் தவறிழைக்கிறது.

வெளிநாட்டில் உள்ள இலங்கையரில் 70 வீதம் தமிழர்கள் என்பது உலகம் அறிந்த விடயம். இதனை மையமாகக் கொண்டு தான் சில மாதங்களுக்கு முன்பாக ஜனாதிபதி கோட்டாபய அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளின் கூட்டத்துக்கு சென்ற போது தனது அரசால் தடை செய்யப்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு பகிரங்க அழைப்பை விடுத்தார். இதன்போதே அரசியல் அவதானிகளுக்கு தெரியும். இலங்கை அரசாங்கம் தனது பொருளாதார இயலுமையை இழந்து விட்டது என்ற உண்மை.

இதனால் தான் தமிழர்கள் ஆகிய நாம் சொல்கின்றோம் இலங்கைத் தீவில் ஏற்பட்ட ஒட்டு மொத்த பொருளாதாரப் பின்னடைவையும் சீர் செய்யும் பலம் புலம்பெயர் தேசத்தில் வாழும் 50 வீதம் தமிழ் முதலீட்டாளர்களிடம் உள்ளது ஆனால் ஜனாதிபதியோ அமைச்சர்களோ அறிவிப்பு விட்டவுடன் தமிழ் முதலீட்டாளர்கள் வருகைதரத் தயார் இல்லை.

காரணம் இலங்கைத்தீவில் தீர்வின்றித் தொடரும் இனப் பிரச்சினை உண்மையாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் உறுதியான நிரந்தரமான அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஆட்சியாளர்கள் கொடுத்தால் நிச்சயமாக தமிழ் முதலீட்டாளர்களால் தேவையான டொலர்களை நாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டை ஐந்தாண்டுகளில் விழ்ந்த பொருளாதாரத்திலிருந்து முன்னோக்கி நகர்த்த முடியும். உள்நாட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்கண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதா? இல்லை பூகோள பிராந்திய வல்லரசுகளிடம் சிக்கி நாட்டை தொடர்ந்து நவ குடியேற்ற வாதத்துக்கு உட்படுத்தி தொடர்ந்து பின்னடைவை சந்திக்கப் போகின்றார்களா? என்பதை இலங்கை ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும்–என்று தெரிவித்தார்.

# இலங்கை பொருளாதார பிரச்சினையை தீர்க்க விமான,கப்பல் சேவைகளை ஆரம்பியுங்கள்!

## சிவசேனை வேண்டுகோள்

இலங்கையின்பொருளாதாரப்பிரச்சினையை தீர்ப்பதற்கு காங்கேசன்துறை காரைக்கால் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக சர்வதேச விமான நிலைய போக்குவரத்தை ஆரம்பியுங்கள் என இலங்கை சிவசேனைப் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த பாரதிய ஜனதா கட்சியின் இந்திய மாநில தலைவர் அண்ணாமலையைச் சந்தித்த போது பல விடயங்கள் பற்றி அவரிடம் ஆழமாகக் கூறியிருந்தோம்.

இலங்கையில் தற்போது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் இருக்கிறன.

யாழ்.காங்கேசன்துறை காரைக்காலுக்கு இடையிலான கப்பல் சேவையை ஆரம்பிப்பதும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவையை ஆரம்பிப்பதும் இதற்குத் தீர்வாகக் கொள்ள முடியும்.

மேலும் இலங்கையில் பௌத்தம், கிறிஸ்தவம்,இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களின் ஆக்கிரமிப்பால் இந்து சமயம் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்ற நிலையில் பாரத பிரதமரின் செயற்பாட்டினால் இலங்கையில் வாழ 30 லட்சம் இந்துக்களை பாதுகாக்க முடியும் என அண்ணாமலையிடம் எடுத்துக் கூறினோம்.

மேலும் கச்சதீவும் இந்துக்களின் புனித பூமியில் ஒன்றாகக் கருதப்படுகின்ற நிலையில் பொலன்னறுவைக் காலத்தில் இந்து சமயம் மேலோங்கி காணப்பட்ட நிலையில் கச்சதீவில் சிவன் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது.

எனினும் போர்த்துக்கேயர் காலத்தில் கச்சதீவில் அமைக்கப்பட்ட சிவன் ஆலயம் அழிக்கப்பட்ட நிலையில் இன்னமும் மீள் உருவாக்கப்படவில்லை.

இலங்கையில் மதமாற்ற சட்டத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக ஆட்சிக் குழப்பத்தின் காரணமாக அதனை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது.

இன்று வடக்கு கிழக்கில் இந்து மக்கள் திட்டமிட்டு மதமாற்றப்படுகின்ற நிலையில் இந்தியாவில் சில மாநிலங்களில் இருப்பது போன்று இலங்கையில் மதமாற்ற தடைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியா உதவ வேண்டும்.

ஆகவே தமிழ் மக்களின் தொப்புள் கொடி உறவான இந்தியா இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு தமிழ் மக்களின் இருப்பையும் இந்து மதத்தின் இருப்பையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த ஊடக சந்திப்பில் இலங்கை சிவசேனை அமைப்பின் பொதுச் செயலாளர் என்.பி. சிறீந்திரன் சிவத் தொண்டர்களான ஜெயாமாறன், வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு சம்பவம்; 3 வருடங்களின்பின் சந்தேகநபர்கள் விடுதலை!

மாவனெல்லையில் புத்தர் சிலைகளுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 சந்தேகநபர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மேலும் 7 பேரை பிணையில் விடுவிக்கவும் மாவனெல்லை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாவனல்லை நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதன்படி, விடுவிக்கப்படும் 14 சந்தேகநபர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கவில்லை என சட்டமா அதிபர் நீதிமன்றில் அறியப்படுத்தியுள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் மூன்று ஆண்டுகளுக்கு அதிக காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 சந்தேகநபர்களையும் குற்றமற்றவர்களாகக் கருதி அவர்களை விடுவிக்க மாவனெல்லை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.





# ஈழ அகதிகளுக்கு தடைபோடுவதற்கெதிராக இந்தியா நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்

## தமிழக மீனவர்கள், அரசியல் கட்சியினர் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

அபயம்தேடி இந்தியா வரும் அப்பாவி மக்களை இலங்கை அரசு தடுப்பதைக் கைவிட இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழக மீனவர்கள் மற்றும் அரசியல்கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதார சீர்கேட்டில் சிக்கித் தத்தளிக்கும் இலங்கையில் அத்தியாவசியப் பொருள்கள் முதல் எரிபொருள் வரை விலை உயர்ந்து உச்சத்தைத் தொட்டுள்ளன. வேலையின்மையால் வருவாயின்றி மக்கள் தவித்து-வரும் நிலையில் பணம் இருந்தாலும் அத்தியாவசியப் பொருள்கள்கூட வாங்க முடியாமல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பாவி மக்கள் அங்கு வாழ முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. நாட்டை இந்த அளவிற்கு கொண்டு வந்த ஆட்சியாளர்களின் திறமையற்ற நிர்வாகத்தை கண்டித்து மக்கள் தன்னெழுச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தநிலையில் அப்பாவிமக்கள் அங்கிருந்து வெளியேறி அபயம்தேடி இந்தியாவிற்கு அகதிகளாகவரத்தொடங்கியுள்ளனர். இவ்வாறு நாட்டை விட்டு செல்பவர்களை தடுக்க இலங்கைக்கடற்படையினர் பாதுகாப்பு மற்றும் ரோந்துப்பணியை அதிகரித்துள்ளனர்.

இத்தனை தடையையும் தாண்டி பலர் இந்தியாவிற்கு வந்த வண்ணமுள்ளனர். இதுவரை யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து 82 பேர் அகதிகளாகத் தமிழகம் வந்துள்ளனர்.

இதனிடையே சட்ட விரோதமாக இந்தியா செல்பவர்களை இலங்கைக் கடற்படையினர் தடுத்து கைது செய்து வருகின்றனர். கடந்த 30 ஆம் திகதி திருகோணமலையிலிருந்து இந்தியாவிற்குச்செல்ல முயன்ற 3 குடும்பங்களைச்சேர்ந்த 13 பேரை இலங்கைக்கடற்படையினர் கைது செய்தனர்.

இதேபோன்று 04.05.2022 அதிகாலை ஒரு மணியளவில் மன்னார் பேசாலை கடற்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் அகதிகளுடன் சென்ற படகை நிறுத்தி சோதனையிட்டபோது 14 பேர் படகிலிருந்தமை தெரிய வந்தது. அவர்களிடம் விசாரணை செய்ததில் 14 பேரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பேசாலை ஊடாகத் தமிழகத்துக்குச் செல்ல முற்பட்டமையும் தெரியவந்தது.

இதையடுத்து 14 பேரும் கடற்படையால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கையின் இந்த நடவடிக்கைகளுக்கு தமிழக மீனவர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுள்ளமையுடன் அபயம்தேடி வரும் அப்பாவி மக்களை இலங்கை அரசுதடுப்பதைக்கைவிட இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.05.2022இல் வெளியிடப்பெற்றது.